**ஒபெக் நிதியளிக்கப்பட்ட கொழும்பு தேசிய நெடுஞ்சாலைகளின் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற செயற்திட்டம் - 2016**

---

ஒபெக் நிதியளிக்கப்பட்ட கொழும்பு தேசிய நெடுஞ்சாலைகளின் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 யூன் 10 ஆந் திகதிய 15111பிபீ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பைச் சூழவுள்ள பிரதான நெடுஞ்சாலைகளின் 65.45 கிலோமீற்றர்களை தரமுயர்த்துதல் மற்றும் நரஹேன்பிட்டிய – நுகேகொட பாலத்தின் மீள்நிர்மாணம் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 12,347.37 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 94.99 மில்லியனானதுடன் அதில் ரூபா 6,499.57 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 50 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 திசெம்பர் 11 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன்

நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்.

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்.

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்.

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்.

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்.

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்.

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்.

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல்

உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டு குறைபாடு

வீதி வலையமைப்பு முன்னேற்றச் செயற்திட்டம் மற்றும் மேல்மாகாண தேசிய நெடுஞ்சாலைகள் செயற்திட்டம் எனும் பெயருடைய ஏனைய செயற்திட்டங்களின் கீழ் வேலைகளினை மேற்கொள்வதற்கு ரூபா 6.94 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த செலவினங்கள் காணி கொள்வனவு கிரயத்தில் கணக்கிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

2016 மார்ச் 24 ஆந் திகதிய 1/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 2.2 ஆம் பந்தியினால் வேண்டப்பட்டவாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் மற்றும் கேள்வி மனு செயன்முறைமையினை பிரயோகித்திராது வெளியிலிருந்து ஆலோசகர் ஒருவரை செயற்திட்டம் ஆட்சேர்ப்புச் செய்திருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஒபெக் கடன் | 50.00 | 6,499.57 | 481.96 | 2.54 | 331.22 | 8.88 | 1,177.66 |
| இலங்கை அரசாங்கம் | 44.99 | 5,847.80 | 1,690.00 | - | 162.38 | - | 2,115.03 |
| **மொத்தம்** | **94.99** | **12,347.37** | **2,171.96** | **2.54** | **493.60** | **8.88** | **3,282.69** |

குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் செயற்திட்டத்தின் வெற்றிகரமான அமுல்ப்படுத்தலினை உறுதிப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிதிசார் மற்றும் பௌதீக மாதாந்த காலாண்டு மற்றும் ஏனையவற்றை முன்னிலைப்படுத்தி முழுமையான காலப்பகுதியினை மேவுகை

செய்யக்கூடிய வகையில் விரிவானதொரு ஒட்டுமொத்த திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும், அவ்வாறானதொரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் போது அடையப்பெற்ற நிதிசார் மற்றும் பௌதிக இலக்குகளினை சுட்டிக்காட்டி யூலை தொடக்கம் 2016 திசெம்பர் வரை செயற்திட்டத்தினால் செயல்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டத்தின் மூல நோக்கெல்லையின் பிரகாரம், 07 ஒப்பந்தப் பொதிகளின் கீழ் கொழும்பு புற நகரிலுள்ள தேசிய வீதிகளின் 65.45 கிலோமீற்றர்கள் புனரமைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. அவற்றில் 02 ஒப்பந்தப் பொதிகளின் கீழ் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலை, தெமட்டகொட – வெல்லம்பிட்டி வீதி, கொலன்னாவ – யக்பெட்ட வீதி, வெலிகந்த – கொஹிலவத்த வீதி, மட்டக்குளி – அலுத்வத்த வீதி மற்றும் மட்டக்குளி மத்திய வீதியினை அடைவதற்கான வீதியின் 12.07 கிலோ மீற்றர் புனரமைப்பு வேலைகள் 2016 யூலை 15 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. காணிக் கொள்வனவு, வேண்டப்பட்ட அங்கீகாரங்களினைப் பெறுவதில் தாமதங்கள் போன்ற பல்வேறு காரணங்கள் காரணமாக, கொட்டாவ – தலகல வீதி, கோட்டை – போபி வீதி, ஒருகொடவத்த – அம்பத்தல வீதி, வல்கம – தியகம வீதி, மொரட்டுவ – பிலியந்தல வீதி, நாவின்த – பொரலஸ்கமுவ வீதி மற்றும் பிலியந்தல – மஹரகம வீதியின் 49.54 கிலோ மீற்றரின் புனர்நிர்மானத்திற்கான ஒப்பந்தங்கள் 2016 திசெம்பர் 31 இல் கூட வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், நரஹேன்பிட்டிய – நாவல – நுகொகொட (நாவல பாலம்) வீதியின் 2/1 ஆம் இலக்க பாலத்தை அகலமாக்குதல் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் 2015 மார்ச் 10 இல் வீதி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நாவின்ன – பொரலஸ்கமுவ வீதியின் 2.41 கிலோமீட்டர் புணர்நிர்மான வேலைகள், அசல் வேலைகளின் வரையறையிலிருந்து அழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவற்றிக்கான செல்லுபடியான காரணங்கள் கணக்காய்விற்கு விபரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1,941 தனியார் காணித்துண்டுகளும் மற்றும் 502 பூர்த்தியாக்கப்பட்ட காணித்துண்டுகளும் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றின் இழப்பீடுகளாக ரூபா 1,469.17 மில்லியன் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காணி கையகப்படுத்தல் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொடர்புடைய பிரதேச செயலகத்திற்கு 2,668 காணித்துண்டுகளின் உரிமைத்துவம் மாற்றப்பட்டிருந்தது.